**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.91/2019**

PW-4

**Date :–13.11.2025**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.இரத்தினவேல் | Caste | |
| த/பெ. | திரு. மலையாளன் | Calling | அப்போலா மருத்துவமனை |
| Village | காவல்காரண பாளையம் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 52/2025 |

**அரசு தரப்பு முதல் விசாரணை-**

நான்தற்போது பெட்டவாயத்தலை காவல்கார பாளையத்தில் வசித்து வந்து அப்போலா மருத்தமனையில் டெக்னிசியனாக வேலை செய்து வருகிறேன்.கடந்த 31.01.2015 ம் தேதியன்று இரவு சுமார் 09 மணிக்கு மேல் வேலையை முடித்துவிட்டு சத்திரத்தில் இருந்து டவுன் பஸ்மூலம் காவல்காரன் பாளையம் செல்வதற்காக ஏறினேன். பிறகு செல்லும்வழியில் சிறுகமணி பஸ்டாப்பில் பஸ் நின்றது அப்போது நான்பேருந்தின் பின் இருக்கையில் அமர்ந்து இருந்தேன் . அப்போது திருச்சியில் இருந்து கிழக்கு நோக்கி வந்த அரசு பேருந்து ஒன்று நின்றுக்கொண்டிருந்த எங்கள் பஸ்மீது மோதியது அதில் எனது பின்னதலையில் அடிப்பட்டது . கை, கால்களில் முட்டியில் அடிப்பட்டு காயம் ஏற்பட்டது . பின்னர் நான் மயக்கம் அடைந்துவிட்டேன். பின்னர் என்னை மருத்துவமனை அழைத்து சென்றார்கள்.

போலீசார் வந்துது என்னை விசாரணை செய்தனர் நடந்த விவரம் கூறினேன். விபத்து ஏற்படுத்திய நபரை நான் தெரிந்துக்கொள்ளவில்லை.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**</u>

**டாமல் என்று சத்தம் கேட்ட பிறகு விபத்தை தெரிந்துக்கொண்டேன் . பேருந்து வடக்குபுறம் 5 அடி தள்ளிநின்றது எனக்கு தெரியவில்லை. இர இருட்டாக இருந்ததால் நான் சென்ற பேருந்து சரியான இடத்தில் நின்றதா என்று எனக்கு தெரியாது . விபத்து ஏற்பட்டது எப்படி என்றும் எனக்கு தெரியாது.**

Sd/-xxxx
Taken down by me in open court , read over to her and accepted by her as correct and made his signature

Sd/-xxxx
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.

## DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.91/2019**

PW-3

**Date :–13.11.2025**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி. செல்வி | Caste | |
| க/பெ. | திரு. ருக்மாந்திரன் | Calling | ஸ்வீட் கடை |
| Village | காமநாயக்கன் பாளையம் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 45/2025 |

**அரசு தரப்பு முதல் விசாரணை-**

நான்தற்போது பெட்டவாயத்தலை காமநாயக்கன் பாளையத்தில் வேலை செய்து வருகிறேன் . கடந்த 31.01.2015 ம் தேதியன்று இரவு சுமார் 09 மணிக்கு மேல் வேலையை முடித்துவிட்டு சத்திரத்தில் இருந்து டவுன் பஸ்மூலம் காமநயக்கன் பாளையம் செல்வதற்காக ஏறினேன் . பிறகு செல்லும்வழியில் சிறுகமணி பஸ்டாப்பில் பஸ் நின்றது அப்போது நான் டிரைவரின் பின் இருக்கையில் அமர்ந்து இருந்தேன் . அப்போது திருச்சியில் இருந்து கிழக்கு நோக்கி வந்த ரூட் பஸ் ஒன்று வந்து நின்றுக்கொண்டிருந்த எங்கள் பஸ்மீது மோதியது அதில் எனது பின்னதலையில் அடிப்பட்டது . எனக்கு பின்னால் அமர்ந்திருந்த ஜெயக்குமார் என்பவர் அடிப்பட்டு இறந்துவிட்டார் . பிறகு என்னை திருச்சியில் உள்ள தனியார் மருத்துவனையில் சிகிச்சையில் சேர்ந்தேன் . நான் மருத்துவமனையில் இருக்கும்போது போலீசார் வந்துது என்னை விசாரணை செய்தனர் நடந்த விவரம் கூறினேன் . விபத்து ஏற்படுத்திய நபரை நான் தெரிந்துக்கொள்ளவில்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

சத்தம் கேட்ட பிறகு விபத்தை தெரிந்துக்கொண்டேன் . ஜெயக்குமார் எந்த சீட்டில் அமர்ந்து இருந்தார் என்று எனக்கு நினைவு இல்லை . நான் சென்ற பேருந்து ரோட்டின்மீது நின்றது. அந்த பேருந்து வடக்குபுறம் 5 அடி தள்ளிநின்றது என்றால் சரிதான் . இருட்டாக இருந்ததால் நான் சென்ற பேருந்து சரியான இடத்தில் நின்றதா என்று எனக்கு தெரியாது.

Sd/-xxxx
Taken down by me in open court , read over to her and accepted by her as correct and made his signature

Sd/-xxxx
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.

www.vadapedia